
# 1947 இல் உதயமான இந்திராணி ஆஸ்பத்திரி இன்றைய பிரதேச வைத்தியசாலையாக மிளிர்ந்ததன் வரலாற்றுப் பின்னனி







இக் கைநூலானது சுவிஸ் வாழ் வல்வை நலன் விரும்பிகளினால் அன்பளிப்பு செய்யப்படும் பற் சிகிச்சை கதிரையை (Dental Chair Unit) கையளிக்கும் வைபவ தினமான 01.12.2019 இல் நன்கொடையாளர்களின் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது.


ஆக்கியோன்

## திரு. ந.சிவரட்ணம்

(வல்வை ஜெயம்)
முருகையன் கோவிலடி தீருவில்
வல்வெட்டித்துறை
ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர்
இலங்கை வங்கி

# 1947 இல் உதயமான இந்திராணி ஆஸ்பத்திரி இன்றைய பிரதேச வைத்தியசாலையாக மிளிர்ந்ததன் வரலாற்றுப் பின்னனி




இக் கைநூலானது சுவிஸ் வாழ் வல்வை நலன் விரும்பிகளினால் அன்பளிப்பு செய்யப்படும் பற் சிகிச்சை கதிரையை (Dental Chair Unit) கையளிக்கும் வைபவ தினமான 01.12.2019 இல் நன்கொடையாளர்களின் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது.

## ஆக்கியோன்


## திரு. ந.சிவரட்ணம்

(வல்வை ஜெயம்)
முருகையன் கோவிலடி தீருவில்
வல்வெட்டித்துறை
ஒய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர்
இலங்கை வங்கி

| | | |
|---|---|---|
| Title | : | Some Retrospective Information of Valvettithurai Oorani Inthirani Hospital |
| Editor | : | Mr. N. Sivaratnam (Valvaijeyam)<br>(B.A(S.L), A.I.B, FI.B. (S.L) P.G. D.ip - in Pub<br>Retired Asst. General Manager, BOC<br>Murugaiyan Kovilady, Theeruvil<br>Valvettithurai. |
| First Edition | : | 01 .12. 2019 |
| Published by | : | Development Society Divisional Hospital<br>Valvettithurai. |
| Printers | : | Guru Printers, 39/2, Adiyapaatham Road,<br>Thirunelvely, Jaffna. |
| No of Pages | : | 16 |
| No of Copies | : | 100 |
| Paper Used | : | 70 Gsm |

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | வல்வெட்டித்துறை ஊறணி இந்திராணி ஆஸ்பத்திரி பற்றிய சில பின்நோக்கிய தகவல்கள் |
| ஆசிரியர் | : | திரு. ந.சிவரட்ணம் (வல்வை ஜெயம்)<br>ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர்<br>இலங்கை வங்கி<br>முருகையன் கோவிலடி தீருவில்<br>வல்வெட்டித்துறை |
| முதற் பதிப்பு | : | 01.12.2019 |
| வெளியீடு | : | அபிவிருத்திச் சபை பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை |
| ப்திப்பகம் | : | குரு பதிப்பகம், 39/2, ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| பக்கம் | : | 16 |
| பிரதிகள் | : | 250 |
| தாள் வகை | : | 70 Gsm |

# மாவட்ட வைத்திய அதிகாரி Dr.M. சுரேந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி




இவ் வைத்தியசாலை பற்றிய இந்த கைநூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நான் இவ்வைத்தியசாலைக்கு மார்ச் 2017ல் பணிக்கு வரும் போது ஒரு வித தயக்கத்துடன்தான் வந்தேன். ஆனால் வந்த கொஞ்சக் காலத்திலேயே இவ்வூர் மக்களிடம் தனித்துவ குணங்கள் / பண்புகள் இருப்பதை அவதானிக்கக்கூடியதாக விருந்தது. இவ்வைத்தியசாலையும் அதன் பணிகளும் பற்றி ஏற்கனவே ஊர் ஆர்வலர்கள் பலர் எழுதி அவை அச்சுருவில் வந்ததையும் நான் வாசித்தும் உள்ளேன். இவ்வூர் மக்கள் சகல துறைகளிலும் முன்னிலை வகிப்பவர்கள். தம் சமூகம் சார்ந்த கல்வி, வைத்தியம், விளையாட்டு, இலக்கியம் போன்றவைகளின் அபிவிருத்திக்கு முன்னின்று உழைப்பவர்கள். இன்றைய இளைஞர், யுவதிகளும் சமூக முன்னேற்றம் கருதி தமது சமூகத்திற்கான விழுமியங்களைக் கட்டிக் காக்க முன்வரவும் வேண்டும். இது பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தவும் வேண்டும்.

இந்த வைத்தியசாலை ஸ்தாபகர் திரு.இ.அப்புக்குட்டியாபிள்ளை அவர்கள் ஒரு தனித்துவம் வாய்ந்தவர். மக்கள் நலன் கருதி அவர் தன் பொருட்செலவில் இவ்வைத்தியசாலையை நிறுவி அரசாங்கத்திடம் கையளித்துள்ளார். ஆனால் அக்காலங்களிலும் சரி இக்காலங்களிலும் சரி அரசாங்கம்தான் அதன் செலவில் வைத்தியசாலைகளை நிறுவி அவற்றை மக்களிடம் கையளித்து வருகின்றது. இவரது தயாள குணத்தைப் பாராட்டி 1950 இல் அரசாங்கத்தின் சார்பில் அன்றைய பிரதமர் திரு. D.S. சேனானக்க இவருக்கு **முகாந்திரம் பட்டம்** வழங்கிக் கௌரவித்தகை நான் எண்ணிப் பார்க்கின்றேன். அப்படிப்பட்ட ஒரு பரோபகாரி நிறுவிய வைத்தியசாலையில் பணி புரிவதை நான் பெருமையாகக் கருதுகின்றேன். வல்வையின் இவ்வைத்தியசாலையும் அதன் வைத்திய சேவையும் வல்வை மக்களின் ஆரோக்கியமும் கூடவே அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

30.11.2019

**Dr. M. சுரேந்திரன்**
மாவட்ட வைத்திய அதிகாரி (D.M.O)
வல்வெட்டித்துறை



# வல்வெட்டித்துறை ஊறணி இந்திராணி ஆஸ்பத்திரி பற்றிய சில பின்நோக்கிய தகவல்கள்

# Some Retrospective Information of Valvettithurai Oorani Inthirani Hospital

## I) ஸ்தாபிதம்

19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எமது ஊரில் வாழ்ந்து வந்த பல வத்தைகளுக்கு (சிறிய பாய் மரக் கப்பல்கள்) உரிமையாளரும், பரோபகாரியுமான அமரர் திரு. இளைய தம்பி அப்புக்குட்டியாபிள்ளையின் எண்ணக் கருவில் உருவான சிந்தனையின் படைப்பே அன்றைய ஊறணி ஆஸ்பத்திரியும் இன்றைய வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்திய சாலையுமாகும்.

வல்வை முத்துமாரியம்மன் கோவிலடியில் வசித்து வந்த கடலோட்டிகளுள் ஒருவரான வை. கதிர்காமத்தமபி அவர்களது தலைமையில் ஒரு குழுவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்து இவ் ஆஸ்பத்திரியை கட்டுவதற்கான மூலப் பொருட்களை தனது வத்தை (சிறிய பாய்மரக் கப்பல்) மூலம் தருவித்தார். இதில் ஒரு பகுதி அண்ணளவாக 28,000 செங்கற்களாகும் (அக்காலத்தில் அதாவது இலங்கை நாட்டின் சுதந்திரத்திற்கு முன் (1948ஆம் ஆண்டு) எமக்கு அரசாங்கத்தால் எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டி ருக்கவில்லை.

1. இதற்கான அடிக்கல் 30-05-1945ல் அன்றைய இலங்கைத் தேசாதிபதி கௌரவ Sir Henry monk Mason Moor என்பவரால் நாட்டப்பட்டது.
2. அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதிகள்.
   - ஆண் நோயாளருக்கான விடுதி (male ward).
   - பெண் நோயாளருக்கான விடுதி (Female ward).
   - வெளிநோயாளர்களைப் பார்வையிடும் பகுதி (O.P.D)
   - மருந்து விநியோகிக்கும் அறை.
   - இவை அனைத்திற்கும் புறம்பாக பிரசவ விடுதி (Labour Room).

வைத்தியசாலைக்கு தன் மகளின் பெயர் கொண்ட **"இந்திராணி வைத்தியசாலை"** என்றும் தனது மனைவியின் பெயர் சொல்ல **"சாரங்கம்மா பிரசவ விடுதி"** எனவும் நாமங்களைச் சூட்டி மகிழ்ந்தார்.

இவ்வைத்தியசாலையை அமைப்பதற்கு ஏற்பட்ட செலவு அக்கால மத்திப்பின்படி ஏறக்குறைய ரூபா 100 000 (ஒரு லட்சம்) ஆகும்.

## உ. திறப்பு விழா

சகல வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின் ஓரளவுக்கு சமாளிக்க கூடிய ஆளணி (Staff - Human Resource) கிடைத்ததும் *01.02.1947*ல் அன்றைய சுகாதார அமைச்சர் கௌரவ George de silva அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## 4. ஆரம்ப வைத்தியர்கள்

ஏற்கனவே ரேவடியில் இயங்கி வந்த மருந்தகத்தில் வைத்தியத்தில் ஈடுபட்டிருந்த திரு. வேலாயுதபிள்ளை செல்லத்தம்பி அவர்களே ஆரம்பத்தில் கடமையாற்றியதாகவும் அவரைத் தொடர்ந்து Dr. சோதிநாதன் , Dr. P. நடராஜா ஆகியோர் கடமையாற்றி வந்தனர். எனவும் அறிகின்றோம்.

பின்னரான வைத்தியர்களை இங்கு பட்டியலிடுவது கடினமானதாகும். எனினும் எமது ஊரைச் சேர்ந்த வைத்திய கலாநிதி Dr. க மயிலேறும் பெருமாளின் காலத்தை (யுத்த காலம்) அபிவிருத்திக்கான காலப்பகுதி எனலாம்.

## Dr. K. மயிலேறும்பெருமாள்

Dr.K மயிலேறும் பெருமாள் ***1997*** லிருந்து இறக்கும் வரை *(07.10.2018)* இவ்வைத்தியசாலையை தனது உயிராக நினைத்து இங்கு பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு எல்லோரும் தேடிவரும் ஒரு பூங்காவாகவும் இதனை மாற்றினார் என்பது மிகையல்ல.

இவர் இவ்வைத்தியசாலையின் வைரவிழா *(2010ல்)* மலருக்காக கொடுத்த நேர்காணிலில் கூறியவற்றை கீழே தருகின்றேன்.

இவ்வளவு காலமும் நான் பட்ட கஸ்டங்கள், வேதனைகள், சோதனைகள் ஏராளம். குறிப்பாக ***2005***ல் இருந்து ***2009*** வரை எந்த ஒரு மருத்துவனுமே கண்டிராத அனுபவித்திராத பயங்கர அனுபவங்களைக் கொண்ட காலமாகும். நான் செய்த பிணப் பரிசோதனைகள் என் கஸ்டத்தைக் கட்டியம் கூறும். சில வேளைகளில் என் உயிருக்கே ஆபத்து என்று தெரிந்து கொண்டு வேறொரு இடத்துக்கும் ஓடாது நிலைத்து நின்று துன்பங்களை எதிர் கொண்டேன். சில வேளைகளில் பிரேத அறையில்கூடத் தூங்கிய காலமுமுண்டு. என் உயிரைக் காப்பாற்றியது எல்லாம் என் குடும்பத்தை விட நான் ஊறணி வைத்தியசாலையை நேசித்ததன் காரணமாகத்தான். ஏனெனில் எனக்கு இரண்டு தரம் மாரடைப்பு வந்தது. வீதி மறிப்பு நேரம் குறுக்குப் பாதையில் சென்று ஒரு காலில் முறிவும் ஏற்பட்டு நொண்டிக் கொண்டுதான் நடக்கிறேன். எல்லாம் அவன் செயல். இவ்வைத்தியசாலை எதிர்காலத்தில் இன்னும் பல்வேறுபட்ட சேவைகளையும் தன்னகத்தே கொண்டு வளர்ச்சி பெற்று மக்களுக்கு எல்லாவிதத்திலும் பயனுள்ளதாக அமைய வேண்டும். எல்லோரும் எமது சேவைகளைப் பெற்று சுகமாக வாழ வேண்டும் என்பதே எனது அவாவாகவுள்ளது.



அமரர் முகாந்திரம் இளையதம்பி அப்புக்குட்டியாபிள்ளை
இந்திராணி ஆஸ்பத்திரி நிறுவுனர் (1947)




அமரர் செல்வி அப்புக்குட்டியாபிள்ளை இந்திராணி

அன்னாரது பெயரில் இந்திராணி வைத்தியசாலை நிறுவப்பட்டது

“இயற்கை எனது நண்பன்
வாழ்க்கை எனது தத்துவாசிரியர்
வரலாறு எனது வழிகாட்டி”

இவருடைய காலத்தில் தன்னுடைய தனிப் பட்ட செல்வாக்கை பயன்படுத்தி உலகெங்கும் வாழும் வல்வை மக்களிடமும் ஏனைய பிரஜை களிடனும் அரசசார்பற்ற நிறுவனங்களிடனும் அரச திணைக்களங்களிலிருந்தும் பல உதவிகளைப் பெற்று இவ்வைத்தியசாலையை அதி உன்னத நிலைக்கு கொணர்ந்து சாதனை புரிந்துள்ளார்.



வைத்திய கலாநிதி க. மயிலேறும் பெருமாள்
தலைவர்,
வைத்தியசாலை அபிவிருத்திச்சபை

## வைத்தியசாலை அபிவிருத்திச்சபை

நான் என் பணியிலிருந்து ஓய்வு பெற்று (2010ல்) எமது மண்ணுக்கு வருவதற்கு முன்னிருந்து இச்சபையில் நிர்வாக சபை அங்கத்தவராக பணி புரிந்து வந்துள்ளேன். அந்த வகையில் எனது காலத்திற்கு முன்னரும் பின்னரும் இன்று வரையிலும் இவ்வபிவிருத்திச் சபையின் பங்களிப்பு பாரட்டப்பட வேண்டியது ஒன்றாகும். இவர்களே, இச்சபையின் தலைவரும் வைத்திய அதிகாரியுமான Dr. K. மயிலேறும் பெருமாளுக்கும் தொடர்ந்து வந்த D.M.O க்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருகின்றனர்.

இவர்களது சேவை மூலம் தற்பொழுது தலைவராகவும் பிரதேச வைத்திய சாலையின் D.M.O வாகவும் பணியாற்றுபவருமான Dr. M.சுரேந்திரன் அவர்களுக்கும் தமது ஒத்தாசைகளை நல்கி வருகின்றனர். இவர்களது கூட்டு முயற்சியால் பல வெற்றிகரமான திட்டங்களை செயற்படுத்தி வருகின்றனர்.

**இதன் ஒரு அங்கமே இன்று 01.12.2019 வல்வை நலன்விரும்பிகள் (சுவிஸ்) என்றவர்களிடமிருந்து எமது பற் சிகிச்சை நிலையத்திற்கான மிக நவீன கதிரையை (Morden Dental chair unit) பெற்று இங்கு நிறுவும் நிகழ்வாகும் என்பதையும் இங்கு பதிவு செய்து கொள்கிறேன்.**

இதற்கென நிதியுதவி செய்த நண்பர்களுள் (சுவிஸ்) பின்வருவோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

1. திரு.T. ஜெயசிகாமணி
2. திரு. M. பிரோமகாந்தன்
3. திரு. A. தர்மரத்தினம்
4. திரு.T. புஸ்பராஜா
5. திரு. K.. சிவநேசன்
6. திரு. P. பரமகுரு
7. மற்றும் பெயர் தெரியாத நண்பர்கள்

இதற்கு இணைப்பாளராக (Co-Ordinator) இலங்கையில் வசிப்பவரும் எமது ஊரைச் சேர்ந்தவரும் Dental Surgeon ஆக புத்தளம் அரசினர் வைத்தியசாலையில் பணிபுரிபவருமான திரு. ப.ஶ்ரீதரன் அவர்களது முயற்சியையும் பாரட்டுகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் இவையாவற்றிற்கும் காரணமாக இருந்து செயலாற்றி வரும் எமது வைத்தியசாலையின் பற் சிகிச்சை வைத்தியர் Dr. K. சிவகுமார் அவர்களது அமைதியான சேவையையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

எனக்கு தெரிந்த வரையில் இவ்வைத்தியசாலைக்கு அர்ப்பணிப்பு செய்தவர்களை இங்கு ஆவணப்படுத்த விரும்புகிறேன். இதில் முதன்மை பெறுபவர் பிரபல வர்த்தகர் அமரர் திரு. சிற்றம்பலம் விஷ்ணுசுந்தரமாவார்.

1960ல் வல்வை மண் இன்றுமொரு புதல்வரை அறிமுகப்படுத்தியது. திரு.இ. அப்புக்குட்டியாபிள்ளையின் பணியைத் தொடர பிரபல வர்த்தகர் திரு சி.விஷ்ணுசுந்தரம் அவர்கள் முன் வந்தார்.

இந்திராணி வைத்தியசாலையின் முற்பக்கமாக கீழ்மாடி, மேல்மாடி எனும் இரு தளங்களைக் கொண்ட கட்டடத்தொகுதியை எமக்காக அர்ப்பணித்தார்.

இது மேல் மாடியில் குழந்தைகள் விடுதியும் கீழ் மாடியில் பிரசவ விடுதியுமாக செயற்படும் விதத்தில் அமைந்துள்ளது. இக்கட்டடத் தொகுதிக்கு தாயார் பெயரான **"திருமதி சிற்றம்பலம் பார்வதிப்பிள்ளை பிரசவ விடுதி"** எனும் பெயர் சூட்டி மகிழ்ந்தார். இது 02.02.1966ல் அப்போதைய சுகாதார அமைச்சர் கௌரவ M.D.H ஜெயவர்த்தன அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

42 படுக்கை வசதிகள் கொண்டதாக இருந்தது 87 படுக்கை வசதிகள் கொண்டதாக விஸ்தரிக்கப்பட்டது.

## இன்னுமொரு நன்கொடை – வைத்தியசாலையுடன் மேற்புறமாக அமைந்த 06 பரப்புக்காணி

மேற்படி காணியை வல்வை மண்ணைச் சேர்ந்த கனகராசாவின் மகன் திரு. S.K கருணாகரனும் அவர் தம் மனைவி திருமதி கௌரி கருணாகரனும் தமக்கு சொந்தமான 06

பரப்பு நிலத்தை, (2010ல் ரூபா 30 000 000 (ரூபா முப்பது இலட்சம்) பெறுமதியானது) வைத்தியசாலை விஸ்தரிப்பிற்கென நன்கொடையாக வழங்கியுள்ளனர். இப்புண்ணிய செயலை வல்வை மக்கள் சார்பில் நாம் நன்றியுடன் பெற்று எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வது எமது பண்பாகும்.

## ஏனைய நன்கொடைகளும் அன்பளிப்புக்களையும் நான் சேகரித்த தரவுகளின் படி கீழே தர விளைகின்றேன்.

### அரச சார்பற்ற நிறுவனங்களால்

1. ஆ) அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை 2006ல் பற் சத்திர சிகிச்சைப் பிரிவு.

   ஆ) இவர்களது நிதியில் (04) நான்கு வைத்திய அதிகாரிகள் தங்குவதற்கான இரண்டு (02) மாடி விடுதி.

2. **NECORD** நிறுவனம் 07.11.2014ல் சமயற்கூடம்.

3. **UNHCR**

   அ) 30.12.2001ல் 24 மணித்தியால நீர் விநியோக (water Supply) வசதி.

   ஆ) 30-11-2003 ல் குழந்தைகளுக்கான விடுதி புனரமைப்பு.

   இ) UNHCR நல்லெண்ணத்தூதுவரும் ஹொலிவூட் நடிகையுமான அஞ்சலீன ஜொலி அவர்களின் தனிப்பட்ட நிதி உதவியிலிருந்து (ரூ 1.0 மில்லியன் என எண்ணுகிறேன்) 2003 ல் குழந்தைகள் விடுதி புனரமைக்கப்பட்டது.

4. **இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு (1947 - 1966)**

   அ) நிர்வாக அலகு (Administration Unit)

   ஆ) D.M.O's Office

   இ) வெளிநோயாளர் பகுதி (O.P.D)

   ஈ) பற் சிகிச்சைக்கூடம்

   உ) மருந்தகம்

போன்றவற்றிகான பங்களிப்பு இவை 21.03.1970 ல் திரு.கு. பாலசிங்கம் (C.A.S) அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

## 5. பொதுவானதும் கூட்டு முயற்சியினாலும் கிடைத்த முன்னேற்றங்கள்.

இவ்வைத்தியாசலையில் 10.06.1989ல் வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலை அபிவிருத்திச்சபை (Development Society) என்ற பெயரில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது.

Dr.V. அப்பாத்துரை Dr. S.V. ஜெகசோதி (பல் மருத்துவர்) ஆகியோர் ஆரம்ப காலத்தில் இவ்வமைப்பினை வழிநடாத்தி வந்தனர். *1997*ல் DR. K. மயிலேறும் பெருமாள் பொறுப்பேற்றதுடன் இது உத்வேகம் பெற்றது.

இவர்களின் முயற்சியினால் பல உள்நாட்டு, வெளிநாட்டு பிரஜைகளுடனும் (குறிப்பாக வல்வை மக்கள்) மற்றும் புலம்பெயர் நாடுகளில் இயங்கும் நலன்புரிச் சங்கம் (வல்வை) போன்றவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நன்கொடைகளைப் பெற்று வைத்தியசாலையின் அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் ஒரு அங்கமாக வல்வெட்டித்துறை நகர சபையையும் (U.C) குறிப்பிடலாம். அத்துடன் அரசாங்கமும் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியையும் வழங்கியுள்ளது.


மேலும் Forut நிறுவனமும் தனது பங்களிப்பை நல்கியுள்ளது. அத்துடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவும் உதவி புரிந்துள்ளது .

இவை யாவற்றிற்கும் Dr. K. மயிலேறும்பெருமாளின் வழிநடத்தலும் அவருடைய தனிப்பட்ட ஆளுமையும் அபிவிருத்திச் சபையினருமே பாரட்டப்பட வேண்டிய வர்களாவர்.

இக்கூட்டு முயற்சியினால் கிடைக்கப் பெற்ற அபிவிருத்திகளை கீழ் காணலாம்.

A) X - Ray கதிர் பிடிக்கும் அறை (x - Ray Room)
B) தொழிநுட்ப ஆய்வு கூடம் (Medical Laboratory)
C) சத்திர சிகிச்சைக் கூட புனரமைப்பு.
D) ஆண்களுக்கான விடுதி புனரமைப்பு.
E) நூலகம்.
F) சைக்கிள் தரிப்பிடக்கூடம்.
G) போசன கூடம்.
H) நோயாளர் சிகிச்சை மண்டப புனரமைப்பு (UNHCR நிதி)
k) *24* மணி நேர நவீன முறையிலான நன்னீர் வழங்கல் திட்டம் (பாரளுமன்ற உறுப்பினர் திரு. M.K. சிவாஜிலிங்கத்தின் நிதியம்
F) இரத்தப் பரிசோதனை சலப் பரிசோதனை, (Blood & Urine) பரிசோதனைக் கருவிகள்.
J) இன்னும் பல பிற

இவ்வரிசையில் இப்போது சுவிஸ் (Swiss) வாழ் வல்வை நலன்விரும்பிகளின் உதவியுடனும் DR.ப.ஸ்ரீதரன் Dental Surgeon (வல்வையைச் சேர்ந்தவர்) அவர்களினதும் Dental Surgeon Dr. K. சிவகுமார் (வல்வை வைத்தியசாலை) மற்றும் தற்போதய D.M.O Dr.M.சுரேந்திரன் ஆகியோரின் வழிகாட்டலுடனும் அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடனும் 01.12.2019ல் பற் சிகிச்சைக் கதிரையை (Dental Chair unit) அன்பளிப்பு செய்யும் ஒரு சிறிய நிகழ்வை நடாத்துகின்றனர்.



அமரர் சிற்றம்பலம் விஷ்ணுசுந்தரம்

நிறுவுனர் பார்வதிப்பிள்ளை பிரசவ விடுதி 1966 இல் திறக்கப்பட்டது.



ஆஸ்பத்திரி கட்டட நிறுவுனரான அமரர் இ. அப்புக்குட்டியாபிள்ளை, அமரர் சி.விஷ்ணுசுந்தரம், மற்றும் இந்திராணி ஆகியோரின் உருவப்படங்கள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்ட காட்சி (2011)




வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் (2010)

இவ்விடயத்தில் வைத்தியசாலையின் ஊழியர்களது பங்களிப்பு எம்மைப் பல வழிகளிலும் உற்சாகப்படுத்தி உள்ளது. இதில் பெரும் பங்களிப்பினை நல்கியவர் ஊழியரான **திரு. R.உதயகுமார் (உதயன்)** என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வபிவிருத்தி சபையானது இவற்றுடன் நின்றுவிடாது தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை O/L, A/L களில் திறமைச் சித்தியெய்தியவர்கள் மற்றும் ஏனைய சாதனை யாளர்களையும் வருடாந்தம் கௌரவிக்கும் நிகழ்வுகளையும் நடாத்தி வருகின்றனர்.

## பரோபகாரி - அமரர் இ. அப்புக்குட்டியாபிள்ளை பற்றிய ஒரு தகவல் - முகாந்திரம் எனும் கௌரவப்பட்டம்

எமது முன்னோரின் கூற்றுப்படி இலங்கையின் முதற் பிரதமர் D.S சேனநாயக வல்வெட்டித்துறைக்கு வருகை தந்து திரு.இ.அப்புக்குட்டியாபிள்ளையைப் பற்றி பாராட்டும் போது....

இலங்கை அரசிற்கு இவர் வழிகாட்டியவர் என்றும், நடைமுறையில் அரசியல் பிரமுகர்கள் அவ்வப்பகுதிகளுக்கு வருகை தரும் போது தங்களுக்கு சுகாதார வசதிகள் செய்து தருமாறும் வைத்தியசாலைகளை அமைத்து தருமாறும் பொது மக்கள் கேட்டுப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆனால் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இப்பெருமகனோ அரசாங்கத்திற்கு ஒரு வழிகாட்டியாக, தனது சொந்தச் செலவில் வைத்தியசாலையை அமைத்து விட்டு திறப்பு விழாவிற்கு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்திருக்கும் முன் மாதிரியான செயலைப் புரிந்து அரசிற்கே வழிகாட்டியாகியுள்ளார்.

அவரின் சேவைக்காக **"முகாந்திரம்"** என்ற கௌரவப்பட்டத்தை இலங்கை அரசின் சார்பில் சூட்டுவதாக *1950*ல் கூறினர்.

**குறிப்பு : இது பற்றி**

1. வல்வை நலன்புரிச் சங்கம் - பிரித்தானியா
2. வைத்திசாலை விஸ்தரிப்புக்கென தமது குடும்பத்திற்கு சொந்தமானதும் *06* பரப்பு கொண்டதும் ரூ *30 000 000* பெறுமதியான காணியை அன்பளிப்பு செய்த வருமான திரு.S.K. கருணாகரன் ஆகியோர் வைரவிழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலும் குறிப்பிட்டுள்ளனர்.

**குறிப்பு :** இவ்வைத்தியாசலையில் ஆரம்ப காலத்திலிருந்து Dr. K.மயிலேறும்பெருமாள் காலம் வரையான காலப்பகுதியில் நிறைய வைத்தியர்கள் அர்பணிப்புடன் கடமை யாற்றியுள்ளனர். இவர்களுக்கு வல்வை மக்கள் சார்பில் நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவருடைய காலப்பகுதியில் கடமை புரிந்த வல்வையின் மைந்தர்களை நன்றியுடன் நினைவு கூருவதையும் ஒரு கடமையாக எடுப்பதும் சிறந்தது என்பதால் இவர்களது பெயர்களையும் (தவறுகள் இருக்கலாம்) இங்கு குறிப்பிடுகின்றோம்.

வல்வையின் மைந்தர்களான Dr.ச. மாணிக்கவாசகர், Dr.R. மயில்வாகனம், Dr.ஆ.தர்மலிங்கம் Dr.சி.சிவயோககுரு, Dr.சி.சோதிமயம் , தொண்டமானாறைச் சேர்ந்த Dr. கிருஷ்ணசாமி, பொலிகண்டியைச் சேர்ந்த Dr. சின்னத்தம்பி, Dr. இ.கனகரத்தினம் ஆகியோர் நீண்ட காலம் பதிவு செய்யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களாகக் கடமை புரிந்துள்ளார்கள். இவர்களுடன் திருமதி. கதிரவேற்பிள்ளை பெரியநாயகி, திருவாளர்கள், கனகசபை சுப்பிரமணியம் (சித்தப்பி), கந்தசாமித்துரை, க.மயில்வாகனம்,இ. சேதுலிங்கம் T. அழகுதுரை, M.சுப்பிரமணியம், [redacted] ஆ.ஆறுமுகக்கடவுள் (பழனியண்ணா) போன்ற வல்வையின் மைந்தர்களும் இவ் வைத்தியசாலையில் கடமை பார்த்த ஒரு சில இதர ஊழியர்களாவர். இவர்களில் திரு.ஆ.ஆறுமுகக்கடவுள் அவர்கள் வைத்தியசாலை ஆரம்பித்த காலத்தில் அமைய ஊழியராகக் கடமையில் இணைந்ததோடல்லாமல் நீண்ட காலமாகவும் இவ்வைத்திய சாலையில் கடமை புரிந்துள்ளார். மேலே குறிப்பிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட வைத்திய உத்தியோகத்தர்களில் Dr.சி.சிவயோககுரு, Dr. சி.சோதிமயம் ஆகியோர் வைத்திய உத்தி யோகத்தர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் சமயங்களில் எவ்வித கொடுப்பனவையும் பெற்றுக்கொள்ளாமல் நோயாளர்களைப் பார்வையிட்டு வைத்தியசாலை நிர்வாகத்திற்கு உதவி புரிந்து வந்துள்ளார்கள் என்பதனையும் குறிப்பிட வேண்டும்.

**இன்னொரு தியாகக் குடும்பம்**

வல்வெட்டித்துறை மயிலியதனையைச் சேர்ந்த பூமணி குடும்பத்தினரின் பிள்ளைகளான சிவலிங்கம், பரமகுரு, குகன் மற்றும் சகோதரி திருமதி சுரேந்திரநாதன் (ஓய்வு நிலை அதிபர்) ஆகியோர் அத்தியாவசிய கட்டடம் போன்ற பாரிய செலவுகளை தாம் ஏற்பதற்கு தயாராக உள்ளதாகவும் அதற்கென ரூ 50 000 000 (ரூபா 5 மில்லியன்) வரை நன்கொடை செய்ய தயார் நிலையில் இருக்கின்றார்கள் என்றும் உறுதியளித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் ஒரு பகுதியாக ஏற்கனவே ரூபா 500 000 (ரூ 5 ,லட்சம்) வழங்கப்பட் டுள்ளதாகவும் மேலதிக நிதியுதவிகளை காலத்திற்கு காலம் வழங்கி வருவதாகவும் அறியக் கிடைக்கின்றன.

# முதியோரும் ஆரோக்கிய மேம்பாடும்

முதியோர் இரு பிரிவுகளாகக் கருதப்படலாம். முதலாவது வகையினர் 60 - 70 வயதினர். (Young - Old) உடல், உள ரீதியில் சுறுசுறுப்பாய் செயலாற்றக்கூடிய வலிமை யுடையோர். சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் பொருளாதார ரீதியில் பயனளிக்கக் கூடிய, செயற்பாடுகளில் பங்குபற்றக்கூடிய நிலையில் உள்ளவர்கள். அடுத்த வகையினர் 75 வயதுக்கு மேற்பட்டோர். (Old - Old) உடல் ரீதியில் பார்வை, செவிப்புலன் மற்றும் நடை ஆகியவற்றில் குறைபாடுகள் உள்ளவர்கள். இதனால் இவர்களுக்கு விசேட பராமரிப்பு தேவைப்படுகிறது.

முதுமை ஒரு நோய் நிலை அல்ல. அது ஒரு உயிரியல் மாற்றம் எனலாம். பயனுள்ள, வெற்றிகரமான முதுமையை நோக்கி முன்னேறுவதற்கு இளம் பராயத்திலிருந்து நாம் எங்கள் வாழ்க்கை முறையில் சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். முதியோரின் மேம்பாட்டினை பின்வரும் அம்சங்கள் நிர்ணயிக்கின்றன. சமூக அம்சம், உடல் ரீதியான அம்சம், உளரீதியான அம்சங்கள் என்பன இதில் உள்ளடங்கு கின்றன.

சமூக ரீதியான அம்சங்களை எடுத்து நோக்கினால் வேலைவாய்ப்பின்மை, வாழ்க்கை முறையில் மாற்றம், பொருளாதாரப் பிரச்சினைகள், ஏனையோருக்கு சுமையாக வாழ்கிறோம் என்ற குற்ற உணர்வு, அந்தஸ்து, சிநேகிதர்களை இழத்தல், வசதிகள், பராமரிப்பாளர் குறைவு போன்ற விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

உடல் ரீதியான அம்சங்களில் நீண்ட கால நோய் நிலைகள், போசாக்கு பிரச்சினை, வலது குறைந்த நிலை, நடப்பதில் கஷ்டம் என்பனவும், உளரீதியான அம்சங்களில் தனிமை, தன்னம்பிக்கை இல்லாமை போன்ற விடயங்களும் உள்ளடங்குகின்றன. ஆகவே ஆரோக்கிய மான முதுமையை அடைவதற்காக நாம் ஆரோக்கிய முன்னேற்றம் மற்றும் நோய் தடை உபாயங்களைக் கையாள வேண்டும்.

## இந்த நோய்த் தடை உபாயங்கள் எவை?

தேகஅப்பியாசம் / உடல் உழைப்பு: பகலில் சுறுசுறுப்புடன் நாளாந்த கடமை களில் உடலைப் பாவிப்பதன் மூலம் முதுமையில் எழும் பல பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். நாளாந்தம் குறைந்தது 20 நிமிடங்களுக்கு நடத்தல், ஒரு சிறந்த தேக அப்பியாச மாகும். மூட்டுக்களையும் தசைநார்களையும் நன்னிலையில் பேணுவதற்கு ஏற்ற தேக அப்பியாசங்களை மேற்கொள்வது சிறந்தது. இதனால் மேலதிக சக்தி (கலோரி) அழிந்து விடுவதுடன். எலும்புகளில் கல்சியம் அதிகரிக்கும், தசை நார்களின் செயற்பாடு மேம்படும். மலங்கழித்தல் ஒழுங்காக நடைபெறும். அத்துடன் உளரீதியான திருப்தி, மகிழ்ச்சி ஆகியன ஏற்பட வழிவகுக்கின்றது. அத்துடன் தியானம், ஓய்வு நேரப் பொழுது போக்கு ஆகியனவும் முதியோரின் மகிழ்ச்சியையும், ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்துகின்றன.

- நாளாந்த நேர அட்டவணை ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஒரு நேரத்தை திட்டமிட்டு அதன்படி செயலாற்ற வேண்டும். உதாரணமாக நித்திரை, நித்திரையிலிருந்து எழும் நேரம், உணவு உண்ணும் நேரம், தேகாப்பியாசம், குளித்தல், பொழுது போக்கு, மதவழிபாடு.
- உணவுப் பழக்க வழக்கங்கள்.
- இலகுவில் சமிபாடடையும் உணவுகளை எடுத்தல்.
- நாளாந்தம் ஒரேவிதமான ஆகாரத்தை எடுப்பதைத் தவிர்த்து நாலாவித உணவுகளை எடுத்தல்.
- ஒரேமுறையில் அதிகளவு உண்பதைவிட சிறிதளவு உணவை நேர இடைவெளி விட்டு இடைக்கிடை உட்கொள்ளல்.
- அதிகளவு சீனி, கொழுப்பு, தேனீர், கோப்பி, மதுபானம் ஆகியவற்றை தவிர்த்தல்.
- புதிய பழங்கள், மரக்கறி உணவுகளை எடுத்தல்.
- போதிய அளவு புரதச்சத்து உணவுகளை (பருப்புவகை, மீன், இறைச்சி) எடுத்தல்.
- தன் சுகாதாரம் பேணல்,
- நாளாந்தம் குளித்தல், வாய்ச் சுகாதாரம், சுத்தமான ஆடைகள், நகங்கள் வெட்டப் பட்டு சுத்தமான நிலையைப் பேணல், தோல் காய்ந்து விடாமல் எண்ணெய் பூசல்.
- திட்டமிட்டபடி வைத்தியப் பரிசோதனை, ஆலோசனை பெறல். குருதி அமுக்கம், பார்வை, செவிப்புலன் ஆகியன குறித்து வைத்திய ஆலோசனை, சுகவனிதையர் கிளினிக்கில் பெண்களின் மார்பகம் அல்லது கருப்பைக் கழுத்தில் புற்றுநோய், நீரிழிவு ஆகியவற்றுக்கான வருடாந்த பரிசோதனை, ஆண்களில் Prostate சம்பந்தமான நோய்களுக்கான வருடாந்தப் பரிசோதனை போன்றவற்றை மேற்கொள்ளல்.
- விபத்துக்களை தடைசெய்தல்.
- அறைகளுள் போதிய வெளிச்சம் இருத்தல்.
- வீட்டுத் தரைக்கு வழுக்காத சாக்கு, கம்பளங்களை இடல்.
- கட்டிலில் அல்லது கதிரையில் இருந்து எழும் போது மெதுவாக எழும்புதல்.
- மருந்துகளை உட்கொள்ளமுதல் இவை சரியான மருந்துகளா என உறுதிப்படுத்தல்.

மேற்படி செயற்பாடுகளை கடைப்பிடிப்பதன் மூலம் முதியோர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த முடியும் என்பதில் ஐயமில்லை.

நன்றிகள்


இலங்கை வங்கி
யாழ் மாவட்ட ஓய்வுதியர் சங்க
வாழ்நாள் வங்கியாளர் சஞ்சிகை
வெளியீடு - **15** இலிருந்து

சுகவாழ்வு மாசி **2019**

**ஏ.எஸ். புகாரிடீன்**
சுகாதாரக் கல்வி அதிகாரி

# வல்வெட்டித்துறைக்கும் வல்வை வைத்தியசாலைக்கும் புகழ் சேர்த்து வருபவரான குருதிக் கொடைச் சாதனையாளர்

## திரு. துரைசாமி சக்திவேல்



தானத்தில் சிறந்தது அன்னதானம் கல்வித்தானம், என்றெல்லாம் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் குருதிக்கொடை எனும் தானத்தை எமக்கு ஆழ்மனதில் பதிய வைத்து உலக சாதனை எனும் அளவிற்கு சாதனைப் பதிவுகளை ஏற்படுத்திய வரைப் பற்றி ஒரு சில வரிகள் எழுதுவதன் மூலம் இன்னும் பலரை இக்கொடையை செய்ய தூண்டுவதும் ஊக்குவிப்பதுமே இக்கட்டுரையின் நோக்கம்.

இவர் பற்றிய சில தகவல்கள் வருமாறு பிறந்த திகதி *17.01.1953* (வல்வெட்டித்துறை), இவரது முதல் குருதிக் கொடை *1971* இல் சிதம்பரக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் கல்லூரியில் நடைபெற்ற நடமாடும் இரத்த தானமுகாமில்.

- இக்கொடை*1972, 1973* களிலும் தொடர்ந்து
- *1973*இன் பின்னர் *1988*ஆம் ஆண்டிலேயே திரும்பவும் குருதிக் கொடையை ஆரம்பித்தார்.
- அவருடனான நேர்காணல் ஒன்றில் இந்த நீண்ட இடைவெளிக்கான காரணத்தை அவர் பின்வருமாறு விளக்கியிருந்தார் " பொதுவாக குருதிக் கொடையின் தேவை முக்கியத்துவம் மற்றும் எங்கே எப்போது, எவ்வாறு குருதிக்கொடையைச் செய்வது என்ற விழிப்புணர்வு மக்களிடையே காணப்படவில்லை நானும் இதற்கு விதிவிலக்கானவன் அல்ல.
- மேலும் அவர் கூறுகையில் மக்களிடையே நிலவும் இன்னுமொரு கருத்து இரத்தம் கொடுப்பதினால் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படும் என்பதாகும்

**குறிப்பு :** ஆனால் இக்கருத்தை மழுங்கடிக்கக்கூடிய வகையில் திரு.து.சக்திவேல் அவர்கள் ஒரே ஆண்டாகிய *1992*ல் அதாவது அவரது *40*வது வயதில் மூன்று தடவைகள் இரத்த தானம் செய்து இன்னும் சுகதேசியாகவுள்ளார்.

இவர் மற்றவர்களிடையேயும் இது பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கி நடமாடும் குருதிக் கொடை முகாம்களை முன்னின்று நடாத்தி வருகின்றார். அவ் வகையில் வல்வையின் சமூக சேவையாளர் அமரர் பூ. அகமணிதேவர் நினைவாக *24.11.2019* இலும் எமது வைத்தியசாலையில் இம்முகாமை நடாத்தியுள்ளர். இது இவர் நடாத்திய *63*வது நடமாடும் சேவை.

இச்சாதனையாளர் தனது *62*வது வயதிலும் இறுதியாக *51* ஆவது தடவையாக இக்கொடையை புரிந்துள்ளார். இப்பெருமகன் பலகாலம் சுகதேகியாக வாழ நாம் அனைவரும் இறைவனை பிரார்த்திப் போமாக

**தொகுப்பு**
**திரு. V.P. பாலேந்திரன்**
செயலாளர்
வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்

# நன்றிகள்


முதற்கண் இத்தொகுப்பினை ஆக்குவதற்குரிய முக்கியமான தரவுகளை எடுக்க உதவிய வைத்தியசாலையின் வைரவிழா மலருக்கு வரையப்பட்ட கட்டுரையின் தொகுப்பாளர் திரு.பா.மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு எனது நன்றிகள்.

மற்றும் இந்நூலை தொகுப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் அனுசரணையும் வழங்கிய சுவிஸ் வாழ் வல்வை நலன்விரும்பிகளும் வைத்தியசாலைக்கு நவீன பற் சிகிச்சை கதிரை (Modern dental chair unit) அன்பளித்த குழுவினர்.

இந்நிகழ்வின் இணைப்பாளர்கள் (Co ordinatior) மற்றும் ஆஸ்பத்திரிச் சமூகம் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினர்.

நேரடியாகவும் மறை முகமாகவும் இந்நூல் உருவாகத்திற்கு உதவிய அன்புள்ளங்களுக்கும்

குறுகிய காலத்தில் இக்கைநூலை பதிப்புச் செய்து தவிய யாழ் திருநெல்வேலி "குரு பிறிண்டேர்ஸ்" நிறுவனத் தினர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.





அமரர் அப்புக்குட்டியாபிள்ளை அவர்களின் உருவச் சிலை
23.01.2011 இல் திரை நீக்கம் செய்யப்பட்டது.